மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 371, திரு. கா.பூ. முனுசாமி, இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. கே. முனிவெங்கடப்பன் கேட்கிறார். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

371-

கோவை வேளாண்மைக் கல்லூரியில் கரும்பு ரகங்களைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சி மேற்கொள்ளுதல்.

***24674-**திரு. கா. பூ. முனுசாமி :*

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பையூரிலுள்ள கோவை வேளாண்மைக் கல்லூரியின் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் தருமபுரி மாவட்டத்திற்கு ஏற்ப அதிக மகசூல் தரும் கரும்பு ரங்களைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எனவே, கேள்வி எழவில்லை.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பையூர் விவசாய ஆராய்ச்சி மையமானது மிகவும் பழமைவாய்ந்த ஒன்று ஆகும். அங்கே நெல்லில், பல புதிய ரகங்களைக் கண்டுபிடித்து, இன்றைக்கு அது நல்ல பயனுள்ள வகையிலே விவசாயிகளுக்குத் தரப்பட்டு விவசாயிகள் பயனடைந்து வருகிறார்கள். அதைப்போன்று, கம்பு, ராகி போன்றவற்றில் பல புதிய ரகங்களைக் கண்டுபிடித்து இருக்கிறார்கள். ஆகவே, இதைப் போன்ற கரும்பை அங்கே கண்டுபிடித்தால் இன்றைக்கு வளர்ந்து வருகின்ற தொழில் அது, தொழிற்சாலைக்கு ஏற்ப கரும்பு உற்பத்தியை நல்லமுறையிலே செய்து கொடுக்க முடியும். ஆகவே, கரும்பு ஆராய்ச்சியை மறுபடியும் துவக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பையூரில் அமைந்துள்ள மண்டல ஆராய்ச்சி

நிலையத்தில் தர்மபுரி மாவட்டம், வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்களில் பயிரிடக் கூடிய நெல், தானியங்கள் ஆகியவை பற்றிய ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. கரும்புக்கு என்று கடலூரில் ஒரு ஆராய்ச்சி மையமும், சிறுகமணியில் ஒரு ஆராய்ச்சி மையமும், வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் மேலாலத்தூர் ஆகிய 3 ஆராய்ச்சி மையங்களிலே கரும்பு பற்றிய ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. இந்த 3 நிலையங்களில் கரும்புப் பயிர் ஆராய்ச்சி செய்து, அந்தப் பயிர்களை தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் பயிரிட்டு, பயிரிடப்பட்ட அனைத்து மாவட்டங்களிலும் அதனுடைய மகசூல் அதிகமாக இருக்கிறதென்று உண்மையை அறிந்த பிறகுதான் வேளாண்மைப் பல்கலைக் கழகம் அதை வெளியிடுகிறது. எனவே தர்மபுரி மாவட்டத்திற்கு வேண்டிய கரும்பு ரகங்களை மேலாலத்தூர் ஆராய்ச்சி நிலையத்தில் பரிசோதனை ஆராய்ச்சி நடைபெற்று, பக்கத்தில் உள்ள தர்மபுரி மாவட்டத்தில் வெளியிடப்பட்டு, அங்கே பயிரிடப்பட்டு, அதிக வருவாயை உழவர் பெருமக்கள் பெற்று வருகிறார்கள்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 372, திரு. கே.ஏ. மனோகரன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. காஞ்சி பன்னீர்செல்வம் கேட்கிறார். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

372 -

தொழில் வல்லுநர்கள் மற்றும் சமூகநலச் சேவகர்களை இயக்குநர்களாக நியமித்தல்

***16389*-திரு. கே.ஏ. மனோகரன் :**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சிப்காட் மற்றும் டி.ஐ.ஐ.சி. போன்ற நிதி நிறுவனங்களில் தொழில் வல்லுநர்கள் மற்றும் சமூக நல்ச் சேவகர்களை அவ்வாரியங்களின் இயக்குநர்களாக நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் உடனே பரிசீலிக்கப்படுமா ?